16.06.2026

COS. No. 8 / 2023

**PW1. – ராஜேஷ்குமார்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் வாதி நிறுவனத்தில் Material Managment Manager ஆக பணிபுரிகிறேன். 2024 ஜுன் மாதத்திலிருந்து மேற்சொன்ன பொறுப்பில் இருந்து வருகிறேன். தாவா சம்பந்தப்பட்ட Purchase Order கள் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, கோப்புகளிலிருந்து சொல்கிறேன். பிராதில் நான் கையெழுத்து போடவில்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். எத்தனை Purchase Order க்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை பார்த்து தான் சொல்ல முடியும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் எதிர்வழக்குரையை படித்துள்ளேன், கூடுதல் எதிர்வழக்குரையை படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். Purchase Order கள் எந்த காலக்கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் 2009 மற்றும் 2010 ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு Purchase Order சம்பந்தமாக நான் தனித்தனியாக படித்து பார்த்தேன். Purchase Order கள் எந்த தேதிக்குள் சப்ளை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் Delivery Date 24.7.2010 குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த Purchase Order ல் ஹரியானாவில் Delivery கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 Purchase Order எத்தனை பக்கங்கள் என்றால் Purchase Order 4 பக்கங்கள், அதனுடன் இணைப்புகள் ஒரு பக்கம். வா.சா.ஆ.8 ல் அது உள்ளதா

என்றால் இல்லை. சாட்சி மீண்டும் Annexure ஒரு பக்கம் இணைக்கப்பட்டுள்ளது என்றும், அது அல்லாமல் கூடுதலாக Annexure உள்ளதாக சொல்கிறார். அந்த கூடுதல் Annexure அதில் இல்லை.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.06.16 17:21:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.